முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

O.S No. 239/2024 **Witness DW 1**

பெயர்: ராஜசுந்தர்

த/பெ.: ராமையன்

இன்று (29/04/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கின் 2ம் பிரதிவாதி செந்தில் (எ) செந்தில்குமார் எனது சகோதரர். தாவா அடமான சொத்து எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் பாத்தியமானது. நாங்கள் விவசாயம் செய்வதோடு, துணி வியாபாரமும் செய்து வருகின்றோம். எனவே எங்களுக்கு கொடுக்கல் வாங்கல் பண பரிவர்த்தனை போன்ற ஆவணங்கள் குறித்து நன்கு தெரியும். அடமான ஆவணத்தை எழுதிக்கொடுக்கும் போது ஆவணத்தில் உள்ள சங்கதிகளை படித்து தெரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சார்பதிவாளர் மேற்படி ஆவணத்தை பதிவு செய்வதற்கு முன்பு ஆவண விவரங்கள் சரிதானா என்றும் பதிவு செய்யலாமா என்றும் கேட்டதற்கு நான் சரி என்று சொன்னேன். அடமான ஆவணத்தில் அசல் தொகை ரூ.8,00,000/- என என்றால் சரிதான். நாங்கள் ரூ. 4,00,000/- வாங்கினேன். அவ்வாறு ரூ.4,00,000/- வாங்கிய நிலையயில் ரூ.8,00,000/- என ஆவணம் எழுத நாங்கள் ஆட்சேபணை செய்யவில்லை. வாதி குடும்பத்தார் எங்களுக்கு நெருங்கிய உறவு. கடந்த 10 ஆண்டுகளாக வாதி குடும்பத்தாரோடு நாங்கள் கொடுக்கல் வாங்கலில் உள்ளோம். தாவா கடனுக்கு வட்டி செலுத்தியதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளது. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வக்கீலிடம் கொடுத்துள்ளேன். அடமான கடன் ஏற்பட்ட நாளில் வாதியின் கணவர் வெளிநாட்டில் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். திருவண்ணாமலையிலுள்ள எனது சொத்தை பாபு என்பவருக்கு அதிகார பகிர்வு ஆவணம் ˙கொடுத்தேன். தாவா கடனுக்கு முன்பாக வாதியின் கணவர் கோபியிடம் நான் ஏற்கனவே கடன் வாங்கியிருந்தேன். அதனால் கோபி சொல்லி திருவண்ணாமலை பாபுவிற்கு எனது சொத்தை பொறுத்து பவர் கொடுத்தேன். கோபி தனக்கு பவர் வேண்டாம் என்று சொன்னதால் பாபுக்கு கொடுத்தேன். பவர் கொடுத்த பிறகு பாபு என்பவர் அந்த சொத்தை குமார் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார். எவ்வளவு ரூபாய்க்கு கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. பாபுவிடம் சொத்து விற்றதற்கு நான் பணம் கேட்கவில்லை. சொத்தை விற்றது தெரியாததால் பணம் கேட்கவில்லை. அந்த பாபு இறந்துவிட்டார். பாபு சொத்தை விற்ற பணம் யாருக்கு சென்றது என்றும் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ1 முதல் 14 ஆவணங்களுக்கும் தாவா கடனுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும், தேவையில்லாத ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா கடனை ஏமாற்ற பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மு.வி. இல்லை

Sd/Tr.C.R.Gowthaman,

Principal Sub Judge,
Villupuram